# புத்தரின் போதனைகளும் திருக்குறளும்

**OPEN ACCESS**

Volume: 13

Special Issue: 5

Month: March

Year: 2026

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

Citation:
*சாக்கியசக்தி, த. புத்தரின் போதனைகளும் திருக்குறளும். Shanlax International Journal of Arts Science and Humanities*, Vol. 13, no. S1, 2026,

pp. 136-41.

*Corresponding Author:
sakkiyasakthi@gmail.com

DOI:
https://doi.org/10.34293/sijash.v13iS5-Mar.11104

***த. சாக்கியசக்தி***
உதவிப் பேராசிரியர், குருநானக் கல்லூரி
சென்னை, தமிழ்நாடு, இந்தியா

***ஆய்வுச்சுருக்கம்***

*இந்த ஆய்வுக் கட்டுரை திருக்குறளின் தத்துவ அடித்தளம் மற்றும் பௌத்தச் சிந்தனைகளுடன் அதன் தொடர்பை விமர்சனப் பார்வையில் ஆராய்கிறது. பண்டிதர் அயோத்திதாசரின் திரிக்குறள் எனும் மறுவாசிப்பு அடிப்படையில், திருக்குறள் புத்தரின் சுத்தபிடகம், ஞானபிடகம் மற்றும் அபிதம்மபிடகம் ஆகிய பௌத்த நூல்களின் தத்துவச் செல்வாக்கில் உருவானதாக சில ஆய்வாளர்கள் கருதுகின்றனர். மேலும், திருவள்ளுவரின் பிறப்பு, குலம் மற்றும் காலம் தொடர்பான மரபுக் கதைகள் சமூக-வரலாற்று கட்டமைப்புகளின் விளைவாக உருவானவை எனும் கருத்தும் எடுத்துரைக்கப்படுகிறது. உரை விமர்சன அணுகுமுறையின் மூலம் திருக்குறளின் அதிகாரங்கள் பௌத்த நெறிமுறைச் சிந்தனைகளான கருணை, அறம், பற்றின்மை மற்றும் ஒழுக்கம் ஆகியவற்றுடன் ஒப்பிடப்படுகின்றன. இதன் மூலம், திருக்குறள் பல்துறை தத்துவச் செல்வாக்குகளின் கலவையாகவும், பொதுமைமிக்க நெறிமுறை இலக்கியமாகவும் விளங்குகிறது என்பது இந்த ஆய்வின் முடிவாகும். மேலும், வள்ளுவரின் வரலாற்று அடையாளம் குறித்து மேலதிக ஆய்வுகள் அவசியம் என்பதும் வலியுறுத்தப்படுகிறது.*

**முன்னுரை**

நீதி இலக்கியங்களில் முதன்மையானதாகக் கருதப்படும் திருக்குறள், புத்தரின் சுத்தபிடகம், ஞானபிடகம் மற்றும் அபிதம்மபிடகம் ஆகிய பௌத்த நூல்களின் தத்துவச்சார்பை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப் பட்டதாக சில ஆய்வாளர்கள் கருதுகின்றனர் (Zvelebil, 1973; Kalupahana, 1992). அந்த வகையில், திருக்குறளின் நெறிமுறைச் சிந்தனைகள் பௌத்த தத்துவ மரபுடன் தொடர்புடையவை எனும் பார்வை முன்வைக்கப்படுகிறது. மேலும், பண்டிதர் அயோத்திதாசர் தனது ஆய்வுகளில் திருக்குறளை திரிக்குறள் எனக் குறிப்பிடுவதன் மூலம் அதன் வரலாற்று மற்றும் தத்துவ அடித்தளங்களை மறுவிளக்கம் செய்துள்ளார் (Ilaignar, 2010). இதன் மூலம், திருக்குறளின் பாரம்பரிய விளக்கங்களுக்கு மாற்றாக ஒரு விமர்சன மற்றும் ஆய்வுக் கண்ணோட்டம் உருவாகிறது. திருக்குறளை இயற்றிய வள்ளுவரின் அடையாளம், சமூகப் பின்னணி மற்றும் அவரது பிறப்பு குறித்தும் பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன (Hart, 1975). அதேபோல், திருக்குறள் உருவான சூழல், அதன் கருத்தியல் அடித்தளம் மற்றும் வரலாற்றுப் பின்னணி குறித்து பல்வேறு கோணங்களில் விவாதங்கள் இடம்பெற்றுள்ளன. இவ்வாய்வுக் கட்டுரை, மேற்கண்ட

கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு திருக்குறளும் புத்தரின் போதனைகளும் இடையிலான தொடர்பை ஆய்வுப் பார்வையில் விளக்குகிறது.

## பிறப்பு

திருவள்ளுவர் பார்ப்பனர் ஒருவருக்கும் பறைச்சியர் ஒருவருக்கும் பிறந்தவர் என்ற கட்டுக்கதை சில மரபுக் கதைகளில் காணப்படுவதாகவும், இதனை மறுத்து வள்ளுவரின் வரலாற்றுப் பின்னணியை மறுவாசிப்புச் செய்யும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர் (Zvelebil, 1973; Hart, 1975). இத்தகைய கதைகள் சமூக அடையாளக் கட்டமைப்புகளின் பிரதிபலிப்பாக உருவாக்கப்பட்டிருக்கலாம் என்றும் கருதப்படுகிறது (Ramaswamy, 1997). சில மரபுச் சொல்லாடல்களில் இலங்கைப் பௌத்த சமூகங்களைப் பற்றிய வர்ணனைகள் இலக்கிய வடிவில் மாற்றப்பட்டுள்ளதைப் போலவே, திருவள்ளுவரின் பிறப்பையும் சமூக அடையாளக் கட்டமைப்புடன் இணைத்து விளக்கும் கதைகள் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன (Zvelebil, 1973). தங்களை உயர்சாதியினர் எனக் கூறும் சமூகக் குழுக்களால் இத்தகைய புராணக் கதைகள் உருவாக்கப்பட்டதாகவும் விமர்சனக் கருத்துகள் உள்ளன (Dirks, 2001).

மேலும், பல்வேறு வரலாற்று மற்றும் புராண நூல்களில் இத்தகைய கதைகள் இடம்பெற்றுள்ளன என்றும், அவை வரலாற்று உண்மையைவிட சமூக-கருத்தியல் நோக்கங்களை பிரதிபலிப்பதாகவும் ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர் (Hart, 1975). 1847ஆம் ஆண்டு வேதகிரி முதலியார் வெளியிட்ட நூல்களில் காணப்படும் புராணக் கதைகள் குறிப்பிடத்தக்கவை. அதில் பிரம்மா யாகம் செய்து கலைமகளை உருவாக்கி அவளை மணந்தார் என்றும், பின்னர் அகத்தியராகத் தோன்றி சமுத்திரக் கண்ணிகையை மணந்து பெருஞ்சாகரனைப் பெற்றார் என்றும் கூறப்படுகிறது. மேலும், சங்கங்கள் மற்றும் வள்ளுவர் தொடர்பான புராண உருவாக்கங்கள் காலநிர்ணயமின்றி விவரிக்கப்படுகின்றன. இத்தகைய கதைகள் வரலாற்று ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டவை அல்லாது, பின்னர் உருவாக்கப்பட்ட புராணக் கற்பனைகள் எனவே அதிகமாகக் கருதப்படுகின்றன (Zvelebil, 1973).

புத்தபிரானின் சரித்திரமும் அவரது போதனைகளும் பரவுவதற்கு முன் இத்தகைய கதைகள் செல்வாக்குப் பெற்றிருந்ததாகவும், பின்னர் பௌத்தச் சிந்தனைகள் பரவியபின் வள்ளுவர் குறித்த பல கருத்துகள் மறுவாசிப்புக்கு உட்பட்டதாகவும் ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர் (Kalupahana, 1992). வட இந்தியாவில் சாக்கையர் என அழைக்கப்பட்ட அரச மரபுகள் இருந்ததாகவும், அவற்றின் தாக்கம் தென்னாட்டிலும் காணப்படலாம் என்றும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன (Zvelebil, 1973). இவ்வாய்வுப் பார்வையின் அடிப்படையில், வள்ளுவர் அரசகுலத்தைச் சேர்ந்தவராகவும், புத்தரின் திரிபிடக போதனைகள் முதலில் வாய்மொழி மரபாக இருந்ததால் பின்னர் எழுத்துருவாக்கம் பெற்றிருக்கலாம் என்றும், அவற்றின் தத்துவச் சார்பில் திருக்குறள் உருவாகியிருக்கலாம் என்றும் பண்டிதர் அயோத்திதாசர் கருத்து தெரிவிக்கிறார் (Ilaignar, 2010).

## வள்ளுவரின் குலம்

வள்ளுவர் பறையர் குலத்தைச் சேர்ந்தவர் எனும் கருத்து சில மரபுக் கதைகளில் இடம்பெற்றுள்ளதாகவும், இதனை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு இலக்கிய விளக்கங்கள் மற்றும் சமூகச் சூழ்ச்சிகள் உருவாக்கப்பட்டதாகவும் ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர் (Zvelebil, 1973; Hart, 1975). குறிப்பாக, சில உரைமரபுகளில் காணப்படும் சொற்றொடர்கள் பின்னர் சமூக அடையாள விளக்கங்களுடன் இணைக்கப்பட்டிருக்கலாம் எனவும் கருதப்படுகிறது. திருவள்ளுவர் இயற்றியதாகக் கூறப்படும் ஞானவெட்டி (அல்லது ஞானவெற்றி) நூலில் செத்த மாடெடுப்போன் என்ற சொற்றொடர் இடம்பெற்றுள்ளதாகக் கூறி, அதன் அடிப்படையில் வள்ளுவர் பறையர்

சமூகத்தைச் சேர்ந்தவர் என வாதிடப்பட்டதாக காணப்படுகிறது. ஆனால், இத்தகைய விளக்கங்கள் உரைமாற்றம் மற்றும் பின்னர் சேர்க்கப்பட்ட வாசிப்புகளின் விளைவாக இருக்கலாம் எனவும் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர் (Hart, 1975).

மேலும், அந்த நூலின் பெயர் ஞானவெட்டியா அல்லது ஞானவெற்றியா என்பதிலும், அதனை இயற்றியவர் திருவள்ளுவ சம்பவனாரா அல்லது திருவள்ளுவ நாயனாரா என்பதிலும் முரண்பாடுகள் காணப்படுகின்றன எனவும் குறிப்பிடப்படுகிறது. அதேபோல், நூலின் செய்யுள் எண்ணிக்கை ஆயிரத்து ஐநூறா அல்லது ஆயிரத்து எண்ணூற்று தொண்ணூற்றொன்பதா என்பதும் தெளிவற்றதாக இருப்பதாகவும் கூறப்படுகிறது. இந்நூலை அச்சிட்டு வெளியிட்டவர்கள் உரையைத் தங்கள் கருத்தியல் நோக்கத்திற்கு ஏற்ப மாற்றியிருக்கலாம் என்ற விமர்சனமும் முன்வைக்கப்படுகிறது. இதனால், மூலப் பாடங்கள் பின்னர் திருத்தப்பட்டவையா அல்லது சேர்க்கப்பட்டவையா என்பது குறித்து உரை விமர்சன (textual criticism) ஆய்வு அவசியம் எனவும் வலியுறுத்தப்படுகிறது.

செத்த மாடெடுப்பது போன்ற சொற்றொடர்கள் வரலாற்று நடைமுறைகளில் பொதுவாக உறுதிப்படுத்தப்படாத நிலையில், அவை நூல்களில் எவ்வாறு இடம்பெற்றன என்பது குறித்து ஆய்வுக் கேள்விகள் எழுகின்றன. எனவே, இத்தகைய பாடவாசிப்புகள் மூல நூலின் பகுதிகளா அல்லது பின்னர் உருவான சேர்க்கைகளா என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும் எனவும் கூறப்படுகிறது. இவ்வாறான நிலைமையில், உரைமரபில் காணப்படும் வேறுபாடுகளை நீக்கி, மூலப் பாடத்தை அடிப்படையாகக் கொண்ட சுத்தப் பதிப்பு (Critical Edition) வெளியிடப்பட வேண்டும் என்ற கருத்தும் முன்வைக்கப்படுகிறது (Zvelebil, 1973).

**வள்ளுவர் காலம்**

சுதேசமித்திரன் பத்திரிகையில் நல்கூர் வேள்வியார் பாட்டில் தெய்வப் புலவர் கடைச்சங்கத்துக்கு இருநூறு அல்லது முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர் என்று கூறியதை அடுத்து பண்டிதர் வள்ளுவரது காலத்தைக் குறித்து, தமது வாதத்தை முன் வைக்கிறார். நம் நாட்டில் கண்ணன் என்றொருவர் பிறந்திருந்தார் என்பதற்கு சரித்திர ஆதாரங்கள் அல்லது செப்பேடுகள் அல்லது சிலாசாசனங்கள் ஏதுமில்லை என்றும் திருவள்ளுவர் மயிலையில் பிறக்கவில்லை மதுரையில் பிறந்துள்ளார் என்று கூறியுள்ளமையினால், அவரது பிறந்த ஊரில் இரண்டு கருத்துகளை அவர்களே கூறுகின்றனர் என்றும் கூறுகிறார். மேலும், இத்துடன் வியாழம், வெள்ளி போன்ற நூலாதாரங்களினால் வள்ளுவர் தமது குறளை இயற்றினார் என்று கூறுவது திருவள்ளுவ மாலையில் உள்ள பாடல்களுக்கு திருவள்ளுவ மாலையில் கூறியுள்ள பாடல்களுக்கு எதிராக உள்ளது என்கிறார். இதுவரை அறியப்படாமலிருந்த வியாழம், வெள்ளி போன்ற நூல்கள் திருவள்ளுவர் ஆதாரம் கொண்டே வியாழம், வெள்ளி, பிரகஸ்பதி, சுக்கிரன், சாணக்கியர் அர்த்த சாஸ்திரம் போன்றவற்றின் தோற்றம் பற்றித் தெரியும் என்று கூறுகிறார்.

மேலும் ஆதிபகவானாம் புத்தர் திரிபீட வாக்கியங்கள் மற்றும் திரிபேத வாக்கியங்களைத் தழுவி, திரிக்குறளை வள்ளுவர் இயற்றியுள்ளார் என்பது விளங்குகிறது என்றும் அதனை மறைப்பது முழு பூசணிக்காயைப் பிடிசாதத்துள் மறைப்பதை ஒக்கும் என்றும் இனி நமது அன்பர்கள் ஆதாரங்களற்ற சரித்திரங்களை ஆராயாமல் நம்பி ஏமாற வேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார். இங்ஙனம் திருவள்ளுவர் பிறப்பு, காலம் போன்றவற்றில் எல்லாம் பொய் கலந்திருப்பதாக கூறும் பண்டிதர், வள்ளுவரின் முதல் குறளில் செய்யப்பட்டுள்ள திருத்தங்கள் பற்றியும் அதன் நோக்கங்கள் பற்றியும் கூறும் பொழுது, திருவள்ளுவரின் கடவுளான புத்தரைச் சிறப்பு செய்யும் பொருட்டு “அகரம் முதல் எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு” என்பதே சரியானதென்றும் மற்றவை எல்லாம்

திரிபுகளே என்றும் கூறுகிறார். மேலும், செய்யுள் தோன்றிய முறை பற்றி அரியதோர் முதல்நூல் தொடர்பும், வழிநூல் சுவையும், சார்புநூல் குணமும் எங்ஙனம் அறிவர் என்றும் கூறிகிறார்.

### கடவுள் வாழ்த்து மற்றும் புத்தர் சார்பு விளக்கம்

திருவள்ளுவரின் திருக்குறள் முழுமையும் பல்வேறு குறைநீக்க ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டு, அதன் உள்ளார்ந்த உண்மையை வெளிப்படுத்தும் வகையில் பண்டிதர் உரை அமைக்கப்பட்டுள்ளது. இதில் கடவுள் வாழ்த்து என்பது புத்தரின் மீது பாடப்பட்ட காப்புப் பாடல் எனவும், மாதா, பிதா, குரு ஆகிய மூவரே தெய்வமாகக் கருதப்படுவதால் வள்ளுவரின் குருவாக புத்தரே கருதப்படுகிறார் எனவும் விளக்கப்படுகிறது. இதன் அடிப்படையில், திருக்குறளின் வழிநூலுக்கு துணையாக இக்கடவுள் வாழ்த்து அமைந்ததாகவும் கூறப்படுகிறது.

### இயற்கை, இல்லறம் மற்றும் சமூக ஒழுக்கங்கள் (அறத்துப்பால் விளக்கம்)

வான் சிறப்பு அதிகாரத்தில் மழை உலக உயிர்களைத் தாய்ப்போல் காக்கும் தன்மையை விளக்குகிறது. அதேபோல் நீத்தார் பெருமை என்பது பாசங்களைத் துறந்து ஞானநிலையை அடைந்தோரின் உயர்வை உணர்த்துகிறது. இவ்விரண்டும் இயற்கை மற்றும் ஆன்மீக உயர்வின் தொடர்பை வெளிப்படுத்துகின்றன. இல்வாழ்க்கை மற்றும் குடும்ப நெறியில் வாழ்க்கைத் துணைநலம், புதல்வரைப் பெறுதல் ஆகியவை இல்லற வாழ்வின் நிலைத்தன்மை, குடும்ப வளர்ச்சி மற்றும் முன்னோர் புகழ் பாதுகாப்பை வலியுறுத்துகின்றன. அன்புடைமை மற்றும் விருந்தோம்பல் அதிகாரங்களில் அன்பே இல்லறத்தின் அடிப்படை என்றும், இனிய சொற்கள் மற்றும் விருந்தோம்பல் மனித உறவுகளை மேம்படுத்தும் நெறிகளாகவும் விளக்கப்படுகின்றன.

செய்நன்றி அறிதல், நடுவுநிலைமை, அடக்கமுடைமை மற்றும் ஒழுக்கமுடைமை ஆகியவை மனிதனின் மனம், சொல், செயல் ஆகிய மூன்றையும் கட்டுப்படுத்தும் அடிப்படை நெறிகளாக விளக்கப்படுகின்றன.

### ஒழுக்கக் குற்றங்கள் மற்றும் மனவியல் நெறிகள்

பொறையுடைமை மனித உயர்வின் அடையாளமாகவும், பொறாமை, லோபம், சூது போன்ற ஆறு மன அழுக்குகள் மனிதனை அழிவுக்கு இட்டுச் செல்லும் காரணங்களாகவும் விளக்கப்படுகின்றன. வெஃகாமை அதிகாரம் ஆசை, கோபம், பசி போன்ற மன வெப்பங்களை கட்டுப்படுத்தும் நெறியாகக் கூறப்படுகிறது.

கள்ளாமை, கள்ளுண்ணாமை மற்றும் பிற சமூக ஒழுக்கங்கள் அன்னியப் பொருள் ஆசை, மதுவின் தாக்கம் மற்றும் வாய்மை குறைபாடு ஆகியவை சமூக நெறியை கெடுக்கும் காரணங்களாக விளக்கப்படுகின்றன.

### குடும்ப வாழ்வு மற்றும் சமூக பொறுப்பு

பெண்வழிச் சேரல் அதிகாரத்தில் மனைவியின் பண்பு குடும்ப முன்னேற்றத்தை தீர்மானிக்கும் முக்கிய காரணமாகக் கூறப்படுகிறது. தீவினை அச்சம் அதிகாரத்தில் தீய செயல்கள் குடும்பத்தையும் சமூகத்தையும் அழிவிற்கு இட்டுச் செல்லும் என எச்சரிக்கப்படுகிறது. ஒப்புரவு, ஈகை மற்றும் புகழ் அதிகாரங்களில் பிறருக்கு உதவுதல், கொடையளித்தல் மற்றும் புகழ் பெறுதல் ஆகியவை இல்லற வாழ்வின் உயர்ந்த நெறிகளாக விளக்கப்படுகின்றன.

### தத்துவ மற்றும் ஆன்மீக நெறிகள்

ஊழ் அதிகாரத்தில் நல்வினை மற்றும் தீவினை மனித வாழ்க்கையை நிர்ணயிக்கும் கர்மச் சட்டமாக விளக்கப்படுகிறது. துறவு, தவம் மற்றும் புலால் மறுத்தல் அதிகாரங்களில் பற்றைத் துறத்தல், உயிர்க்கருணை மற்றும் எளிய வாழ்வு ஆன்மீக உயர்வுக்கான வழிகளாக கூறப்படுகின்றன. இன்னா செய்யாமை மற்றும் வெகுளாமை அதிகாரங்களில் பிறருக்கு துன்பம் செய்யாமை மற்றும் கோபத்தை அடக்குதல் உயர்ந்த அறமாக வலியுறுத்தப்படுகிறது. அவா அறுத்தல் மற்றும் மெய்யுணர்தல் அதிகாரங்களில் ஆசையை கட்டுப்படுத்துதல் மற்றும் உண்மையை உணர்தல் ஆன்மீக முன்னேற்றத்தின் அடிப்படையாக விளக்கப்படுகிறது. இறுதியாக, அருளுடைமை அதிகாரத்தில் அருள், அன்பு, ஈகை ஆகியவை மனிதனின் உண்மையான சிறப்பாகக் கூறப்படுகின்றன.

### முடிவுரை

நீதி இலக்கியங்களில் முதன்மையானதாகக் கருதப்படும் திருக்குறள், புத்தரின் போதனைகளை மையமாகக் கொண்டே அமைந்துள்ளது என்ற கருத்து பல பண்டிதர்களால் முன்வைக்கப் பட்டுள்ளது. குறிப்பாக, பண்டிதர் அயோத்திதாசர் தமது ஆய்வுகளில் திருக்குறளின் நெறிமுறைச் சிந்தனைகள் பௌத்தத் தத்துவ மரபுடன் நெருங்கிய தொடர்புடையவை என விளக்கியுள்ளார். மேலும், திருவள்ளுவரின் பிறப்பு, காலம் மற்றும் சமூகப் பின்னணி குறித்து நிலவும் மரபுக் கதைகள் பலவும் பின்னர் உருவான சமூக-வரலாற்று கட்டமைப்புகளின் விளைவாக இருக்கலாம் எனவும் சில ஆய்வுகள் குறிப்பிடுகின்றன (Zvelebil, 1973; Rajasekaran, 2015). அதேபோல், திருக்குறளின் பல அதிகாரங்கள்-அறம், பொருள், இன்பம் சார்ந்த நெறிமுறைகள்-புத்தரின் திரிபிடக போதனைகளில் காணப்படும் கருணை, அறச்செயல் மற்றும் பற்றின்மைச் சிந்தனைகளுடன் ஒப்பிடத்தக்கவை எனவும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர் (Hart, 1986). இதன் அடிப்படையில், திருக்குறள் ஒரு பொதுமை மிக்க நெறிமுறை நூலாகவும், தத்துவ ஒத்திசைவுடன் உருவானதாகவும் விளங்குகிறது. எனவே, மேற்கண்ட ஆய்வுகளின் அடிப்படையில் திருக்குறள் புத்தர் போதனைகளுடன் தொடர்புடைய தத்துவ அடித்தளங்களை கொண்டிருக்கலாம் என்ற கருத்து ஆய்வுப் பார்வையில் வலுப்பெறுகிறது. அதே நேரத்தில், திருவள்ளுவரின் வரலாற்று அடையாளம் மற்றும் கால நிர்ணயம் குறித்து தொடர்ந்து பல்வேறு கோணங்களில் ஆய்வுகள் தேவைப்படுகின்றன.

### நன்றி

இக்கட்டுரை தென்கொரியத் தமிழாய்வு மன்றத்தின் முதலாம் உலகளாவிய திருக்குறள் மாநாட்டிற்காக (ITCSK 2025) எழுதப்பட்டுள்ளது. இவ்வாய்வுக் கட்டுரையை சமர்ப்பிக்கும் வாய்ப்பை வழங்கிய தென்கொரியா தமிழ் ஆராய்ச்சி அமைப்பு (SKTRA) தலைவர் முனைவர் ஆரோக்கியராஜ் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களின் ஊக்கமும் ஆதரவும் இவ்வாய்வை நிறைவு செய்ய முக்கிய பங்களிப்பை வழங்கியுள்ளது.

### References

1. Hart, G. L. (1975). The Poems of Ancient Tamil: Their Milieu and Their Sanskrit Counterparts. University of California Press.
2. Ilaignar, S. (2010). Ayothidasar and Reinterpretation of Thirukkural. Chennai: (Tamil research publication series).
3. Ilangovan, (Ilaignar). (2010). Ayothidasar Ariviyalum Thirukkural Vimarshanamum. Chennai: (Publication details vary by edition).
4. Kalupahana, D. J. (1992). A History of Buddhist Philosophy. University of Hawaii Press.

5. Maharajan. (Year). Ayothidhasar Tamil Adayala Arasiyal. (Place of publication: Publisher).
6. Raj Gouthaman. (Year). Ayothidhasar Aayvugal A÷¯õzvuõ\º B#ÄPÒ. Chennai: (Publisher details if available).
7. Rajasekaran, K. (2005). Socio&historical readings of Thirukkural traditions. (Tamil studies research article / citation used in Tamil academic discourse).
8. Ramaswamy, V. (1997). Passions of the Tongue: Language Devotion in Tamil India, 1891&1970. University of California Press.
9. Thiruvalluvar. Thirukkural. Various editions (with commentaries such as Parimelazhagar).
10. Vijayakumar, M. (Ed.). (Year). Ayothidhasarin Thirikkural & Pathippu A÷¯õzvuõ\›ß v›USÓÒ & £v¨¦. (Publication details if available).
11. Zvelebil, K. V. (1973). The Smile of Murugan: On Tamil Literature of South India. Brill.